1978 மார்ச் 2]

கோழி வளர்ப்புப் பண்ணைகள் நிறுவ உதவி.

*357 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழி வளர்ப்புப் பண்ணைகள் நிறுவிட அரசு உதவி புரிந்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிறு உழவர், சொற்ப நில உழவர், வேளாண்மைத் தொழிலாளர் ஆகியவர்களுக்கும் இது தவிர மலைவாசிகளுக்கும் அரசு உதவி செய்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த கோழி வளர்ப்புப் பண்ணைகள் பெரும்பாலும் கிராமங்களில்தான் இருந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறது. நகரங்களிலும் கோழிகளை வளர்க்கின்ற திட்டங்களுக்கு உதவும் வகையில் அதற்கான முயற்சிகளை எந்த வகையில் அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மட்டுமல்லாமல் நகர்ப்புறங்களிலும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்த கோழிப் பண்ணைகளில் மிகவும் நஷ்டம்தான் வருகிறது. இந்தக் கோழிப் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கு, நஷ்டம் வராமல் நடத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கூடுமானவரையில் நட்டம் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மூலமாகச் செயல்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தற்போது தமிழகத்தில் கோழி வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன ? இந்த கோழி வளர்ப்புப் பண்ணைகளில் எத்தனை கோழிகள் உயிரோடு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, திரு. கிட்டப்பா அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கிராமங்களிலே கோழி வளர்க்கிறபோது அடிக்கடி ஏதாவது வியாதி வந்து ஏககாலத்திலே செத்து விடுகின்றன, கிராமங்களிலே அதற்குப் போதுமான மருத்துவ வசதிகள் இல்லை, ஆகவே மருத்துவ வசதிகள் செய்து தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கோழிகளுக்கு நோய் வந்தால் அவைகளைத் தடுக்கக்கூடிய முறையிலே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கோழிகள் இறக்காமல் இருப்பதற்கும் நல்ல முறையிலே வளர்க்கப்படுவதற்கும் உண்டான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைகள் நட்டத்தில் ஓடுவதாகச் சொல்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக்கபூர்வமான நடவடிக்கை என்றால் என்ன ? ஆக்கப்பூர்வமான என்ற அந்த வார்த்தையே அதை வளர்ச்சி செய்து விடுமோ ? நட்டம் இல்லாமல் அவைகள் நடக்கக்கூடிய வகையில் இல்லை. காரணம் தீவனத்தின் விலை அதிகமாக இருக்கிறது என்கிறார்கள், ஆகவே, தீவனத்தைக் குறைந்த விலையில் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே' ஆக்கப் பூர்வமான நடவடிக்கை என்று சொன்னால் கோழிகள் இடும் முட்டைகளின் எண்ணிக்கையைப் பெருக்குவது, கோழிகளை அதிகமான விலைக்கு விற்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வது, கோழிப் பண்ணைகள் நட்டம் இல்லாமல் நடக்குமாறு அதிகாரிகளைக் கண்காணித்துக் கொண்டு நல்ல முறையிலே நடத்துவது ஆகியவை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள். இந்த நடவடிக்கைகளை இந்த அரசு தவறாமல் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, முதுகளத்தூர் பகுதியிலே பேரையூரிலே கோழிப் பண்ணை ஒன்று இருந்து. 3, 4 ஆண்டுகளுக்கு முன்னதாக மூடப்பட்டு விட்டது, அதை மறுபடியும் திறக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபற்றி அரசு ஆராயும்.